செ. வெ.எண்.672 நாள்:09.08.2010

## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் – தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் – சேகோசர்வ் நிறுவனம் சார்பாக ஆதாயப் பங்குத் தொகை 25 கோடியே 83 இலட்சம் ரூபாய் !

# முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்

## அமைச்சர் பொங்கலூர் நா. பழனிசாமி வழங்கினார் !

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் சேகோசர்வ் ஆகிய மூன்று நிறுவனங்களும் கடந்த ஆண்டுகளில் சிறப்பாகச் செயல்பட்டு இலாபம் ஈட்டியுள்ளன. அதன் பயனாக, இந்நிறுவனங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய நியமனக் கட்டணம் மற்றும் ஆதாயப் பங்குத் தொகைகளை வழங்கிட முடிவு செய்து, அதன்படி, தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் சார்பில் 2009–2010 ஆம் ஆண்டுக்குரிய நியமனக் கட்டணமாக 24 கோடியே 75 இலட்சம் ரூபாய்; தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில் 2008–2009 ஆம் ஆண்டுக்குரிய ஆதாயப் பங்குத் தொகையாக 87 இலட்சம் ரூபாய்; சேகோசர்வ் நிறுவனம் சார்பாக 2007–2008 மற்றும் 2008–2009 ஆம் ஆண்டுகளுக்கான ஆதாயப் பங்குத் தொகையாக 21 இலட்சத்து 46 ஆயிரத்து 237 ரூபாய் என – மொத்தம் 25 கோடியே 83 இலட்சத்து 46 ஆயிரத்து இருநூற்று முப்பத்தி ஏழு ரூபாய்க்கான மூன்று காசோலைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி இன்று (9–8–2010) வழங்கினார்.**

**இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திரு. ப. செல்வம், இ.ஆ.ப., சிட்கோ நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., சிட்கோ நிறுவன பொது மேலாளர் திருமதி ஜி. லதா, டான்சி நிறுவன பொது மேலாளர் திரு. ப. கிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * * *

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9